**02-01-2021 காலைமுரளி ஓம்சாந்தி பாப்தாதா மதுபன்**

**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, என்றுமே முரளியைத் தவற விடாதிருத்தல் - சகல கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதலே தந்தையின் ஸ்ரீமத்திற்கு மதிப்பளித்தல் என்பதன் அர்த்தம் ஆகும்.

**கேள்வி:** நீங்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கிறீர்களா எனக் குழந்தைகளாகிய உங்களிடம் வினவப்பட்டால், நீங்கள் போதையுடன் என்ன பதிலை அளிக்க வேண்டும்?

**பதில்:** அவர்களிடம் கூறுங்கள்: அப்பாலுள்ள பிரம்ம தத்துவத்தில் வாழ்பவரைக் கண்டடைய வேண்டும் என அக்கறை கொண்டிருந்தேன். இப்பொழுது நான் அவரைக் கண்டுவிட்டதால், எனக்கு வேறு என்ன வேண்டும்? நான் விரும்பியதை அடைந்து விட்டேன். கடவுளின் குழந்தைகளாகிய நீங்கள் வேறெதிலும் அக்கறை கொண்டிருப்பதில்லை. தந்தை உங்களைத் தனக்குரியவர் ஆக்கி, உங்கள் தலைகளில் கிரீடங்களை அணிவிக்கிறார். ஆகையால் நீங்கள் வேறு எதனைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும்?

ஓம் சாந்தி. பாபாவே தந்தையும், ஆசிரியரும், பரமகுருவும் என்பது குழந்தைகளாகிய உங்கள் புத்திகளில் நிச்சயமாக இருக்க வேண்டும் எனத் தந்தை கூறுகின்றார். நீங்கள் நிச்சயமாக இதனை நினைவுசெய்ய வேண்டும். இந்த நினைவை வேறு எவராலும் கற்பிக்க முடியாது. ஒவ்வொரு கல்பத்திலும் தந்தையே வந்து இதை உங்களுக்குக் கற்பிக்கின்றார். அவர் மாத்திரமே ஞானக்கடலும், தூய்மையாக்குபவரும் ஆவார். அவரே தந்தையும், ஆசிரியரும், குருவும் ஆவார். இப்பொழுது நீங்கள் மூன்றாவது கண்ணான ஞானத்தைப் பெற்றிருப்பதால், உங்களுக்கு இது புரிகின்றது. குழந்தைகளாகிய நீங்கள் இதனைப் புரிந்துகொண்டிருந்தாலும் சிலர் தந்தையை மறந்து விடுகின்றார்கள், எனவே அவர்களால் எவ்வாறு ஆசிரியரை அல்லது குருவை நினைவுசெய்ய முடியும்? நீங்கள் அவரின் மூன்று வடிவங்களின் புகழையும் அறிந்திருந்தாலும் அம் மூன்று வடிவங்களையும் உங்களை மறக்கச் செய்யுமளவிற்கு மாயை மிகவும் சக்தி வாய்ந்தவள்; அவள் அந்தளவிற்குச் சர்வசக்தி வாய்ந்தவள். குழந்தைகளும் எழுதுகின்றார்கள்: பாபா, நாங்கள் மறக்கின்றோம்! மாயை மிகவும் சக்தி வாய்ந்தவள்! நாடகத்திற்கு ஏற்ப இது மிகவும் இலகுவாகும். அவரைப் போன்று வேறு எவருமே என்றுமே இருக்க முடியாது என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். அவர் தந்தையும், ஆசிரியரும், சற்குருவும் ஆவார். அவர் உண்மையில் அவ்வாறானவர்; இது கட்டுக்கதை அல்ல. இந்தப் புரிந்துணர்வு உங்களுக்குள் இருக்க வேண்டும், ஆனால் மாயை உங்களை மறக்கச் செய்கின்றாள். தாம் தோற்கடிக்கப்படுவதாகச் சிலர் கூறுகின்றார்கள். அவ்வாறாயின், ஒவ்வோர் அடியிலும் அவர்களால் எவ்வாறு பல மில்லியன்களைச் சேமிக்க முடியும்? தேவர்கள் தாமரைச் சின்னத்துடன் சித்தரிக்கப்படுகின்றார்கள். இதனை அனைவருக்கும் கொடுக்க முடியாது. இக்கல்வி மனிதர்களால் அன்றி, கடவுளால் கற்பிக்கப்படுகின்றது. மனிதர்களால் இக்கல்வியை என்றுமே கற்பிக்க முடியாது. தேவர்கள் புகழப்பட்டபொழுதிலும், ஒரேயொரு தந்தை மாத்;திரமே அதிமேலானவர். இன்று, "கழுதைத்தனம்" உள்ளவர்களாக இருந்து, நாளை இராச்சியம் கிட்டுகின்ற அவர்களுக்கு எவ்வாறு மேலதிகப் புகழ் இருக்க முடியும்? நீங்கள் இப்பொழுது அவர்களைப் (இலக்ஷ்மி நாராயணன்) போல் ஆகுவதற்கு முயற்சி

செய்கின்றீர்கள். பலரும் தமது முயற்சியில் தோல்வியடைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். முன்னைய கல்பத்தில் சித்தியடைந்தவர்களே இப்பொழுது கற்கின்றார்கள். உண்மையில் இந்த ஞானம் மிகவும் இலகுவானது, ஆனால் மாயை உங்களை அதனை மறக்கச் செய்கின்றாள். தந்தை கூறுகின்றார்: உங்கள் அட்டவணையை எழுதுங்கள்! எவ்வாறாயினும், உங்களால் அதனை எழுத முடிவதில்லை. நீங்கள் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்து எழுதப் போகின்றீர்கள்? நீங்கள் அதனை எழுதுவதற்காக அமரும்பொழுது, நீங்கள் இரண்டு மணித்தியாலம் நினைவில் நிலைத்திருந்தீர்களா எனச் சோதித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது, நீங்கள் தந்தையின் ஸ்ரீமத்தைப் பயிற்சி செய்வதால், அதனைப் பின்பற்றுகின்றீர்களா என்பதும் பார்க்கப்படுகின்றது. ஒருவேளை அந்த அப்பாவி, ஆதரவற்ற குழந்தைகள் அதற்காக வெட்கப்படுகின்றார்கள் என்பதைத் தந்தை புரிந்துகொள்வார்! இல்லாவிடின் ஸ்ரீமத் பயிற்சியிலிடப்படும். எவ்வாறாயினும், அரிதாக இரு சதவீதத்தினரே அட்டவணையை வைத்திருக்கிறார்கள். குழந்தைகள் அந்தளவிற்கு ஸ்ரீமத்திற்கு மதிப்பளிப்பதில்லை. அவர்கள் முரளியைப் பெற்றபொழுதிலும், அதனைக் கற்பதில்லை. பாபா உண்மையில் சத்தியத்தையே கூறுகின்றார் என்று அவர்களின் இதயம் நிச்சயமாக அவர்களை உறுத்த வேண்டும். நான் முரளியைக் கற்காதிருந்தால், பிறருக்கு என்னால் எதனை விளங்கப்படுத்த முடியும்? (நினைவு யாத்திரை). ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு விளங்கப்படுத்துகின்றார். நாங்கள் உண்மையில் ஆத்மாக்கள் என்பதையும், பரமாத்மாவான பரமதந்தையே எங்களுக்குக் கற்பிக்கின்றார் என்பதையும் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். அதனை விட வேறு என்ன அவர் கூறுகின்றார்? என்னை நினைவுசெய்தால், நீங்கள் சுவர்க்கத்தின் அதிபதிகள் ஆகுவீர்கள்! தந்தை, கல்வி, ஆசிரியர் அனைத்தும் இதில் அடக்கப்பட்டுள்ளது. சற்கதியை அருள்பவரும் இதில் உள்ளடக்கப்படுகின்றார். அனைத்து ஞானமும் வெகு சில வார்த்தைகளில் அமிழ்ந்துள்ளன. இதனை மீட்டல் செய்யவே நீங்கள் இங்கே வருகின்றீர்கள். நீங்கள் மறந்து விடுகிறீர்கள் என நீங்களே கூறுவதாலேயே தந்தை இதனை விளங்கப்படுத்துகின்றார். இதனாலேயே நீங்கள் இங்கே வந்து மீட்டல் செய்கின்றீர்கள். சிலர் இங்கேயே வாழ்ந்தபொழுதிலும் அவர்களால் அதனை மீட்டல் செய்ய முடியாதுள்ளது. அது அவர்களின் பாக்கியத்தில் இல்லை! நீங்கள் முயற்சி செய்வதற்கு தந்தை உங்களைத் தூண்டுகின்றார். ஒரேயொரு தந்தை மாத்திரமே உங்களை முயற்சி செய்யத் தூண்டுகின்றார். இதில் விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றது என்றோ அல்லது விசேடமான கல்வி ஒன்றுள்ளது என்றோ இல்லை. உலகக் கல்வியில் குறிப்பாகப் பிரத்தியேக வகுப்பைக் கற்பிப்பதற்கு ஓர் ஆசிரியரை அவர்கள் நியமிக்கின்றார்கள். அந்த ஒரேயொருவரோ அனைவரும் தமது பாக்கியத்தை உருவாக்குவதற்காக ஒன்றையே கற்பிக்கின்றார். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் எந்தளவை அந்த (பரம) ஆசிரியர் கற்பிப்பார்? பல குழந்தைகள் உள்ளார்கள்! உலகக் கல்வியில் சில மாணவர்கள் முக்கியஸ்தர்களின் பிள்ளைகள் என்பதால் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படுகின்றது. அவர்களின் ஆசிரியர், ஒருவர் மந்தமான மாணவனாக இருக்கின்றார் என்பதைப் புரிந்துகொண்டால், அவரை ஒரு புலமைப்பரிசிலைப் பெறுவதற்குத் தகுதியானவர் ஆக்க முயற்சிப்பார். அந்தத் தந்தை இவ்வாறு செய்வதில்லை. அவர் அனைவருக்கும் ஒன்றையே கற்பிக்கின்றார். ஏனைய ஆசிரியர்கள் நீங்கள் மேலதிக முயற்சி செய்;வதற்கு உங்களைத் தூண்டுவார்கள். அவர் தனிப்பட்ட ரீதியில் எவரையும் மேலதிக முயற்சி செய்யுமாறு கேட்பதில்லை. ஒரு மாணவர் திறமைசாலியாகுவதற்காக ஓர் ஆசிரியர்

விசேடமான நேரத்தை ஒதுக்குவதற்காக அவருக்குச் சம்பளம் வழங்கப்பட்டாலும், மேலதிக முயற்சி செய்ய ஒருவரைத் தூண்டுதல் என்றால் அவர் மீது அவ் ஆசிரியருக்கு விசேட கருணை உள்ளது என்று அர்த்தமாகும். எவ்வாறாயினும், இங்கே மேலதிகக் கல்வி என எதுவும் இல்லை; அந்தக் கேள்விக்கே இடமில்லை. அவர் "மன்மனபவ!" என்ற ஒரேயொரு மகா மந்திரத்தையே உங்களுக்குக் கொடுக்கின்றார். நினைவுசெய்வதன் மூலம் என்ன நடக்கின்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். தந்தையே தூய்மையாக்குபவர் என்பதை நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். அவரை நினைவுசெய்வதனால் நீங்கள் தூய்மையாகுகின்றீர்கள் என்பதை அறிவீPர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு இப்பொழுது ஞானம்; உள்ளது. நீங்கள் அதிகளவு நினைவுசெய்யும்பொழுது, அதிகளவு தூய்மையாகுவீர்கள். நீங்கள் குறைந்தளவு நினைவுசெய்யும்பொழுது, குறைந்தளவே தூய்மையாகுவீர்கள். அவை அனைத்தும் குழந்தைகளான உங்களது முயற்சியிலேயே தங்கியுள்ளது. எல்லையற்ற தந்தையை நினைவுசெய்வதன் மூலம் நாங்கள் இலக்ஷ்மியும் நாராயணனும் ஆக வேண்டும். அனைவருக்கும் அவர்களின் புகழ் தெரியும். 'நீங்கள் புண்ணியாத்மாக்கள், நாங்கள் பாவாத்மாக்கள்' எனக் கூறப்படுகின்றது. அவர்களுக்குப் பல்வேறு ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. மக்கள் அங்கே எதற்காகச் செல்கின்றார்கள்? ஒரு கணப் பார்வை கிடைப்பதனால் நன்மை எதுவும் இல்லை. பிறர் ஆலயங்களுக்குச் செல்வதைப் பார்த்துத் தாமும் செல்கின்றார்கள். அவர்கள் அங்;கே ஒரு கணப் பார்வையைப் பெறுவதற்காகவே செல்கின்றார்கள். சிலர் கூறுகின்றார்கள்: இன்னார் யாத்திரை செல்கிறார், நானும் செல்ல வேண்டும். அதனால் என்ன நடக்கும்? எதுவும் நடக்க மாட்டாது! குழந்தைகளாகிய நீங்களும் யாத்திரையில் சென்றிருக்கிறீர்கள். அவர்கள் ஏனைய விழாக்களைக் கொண்டாடுவதைப் போன்றே யாத்திரையில் செல்வதையும் விழா எனக் கருதுகின்றார்கள். நீங்கள் இப்பொழுது நினைவு யாத்திரையை ஒரு விழாவாகவே கருதுகிறீர்கள். நீங்கள் நினைவு யாத்திரையில் இருக்கின்றீர்கள். 'மன்;மனாபவ' என்ற ஒரு வார்த்தை மாத்திரமே உள்ளது! உங்களது இந்த யாத்திரை அநாதியானது. தாம் அநாதியாக யாத்திரை செல்வதாக அவர்களும் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும், நீங்கள் இந்த யாத்திரையை ஒவ்வொரு கல்பமும் செய்கிறீர்கள் என அவர்களிடம் நீங்கள் கூறுவதற்கு உங்களிடம் ஞானம் உள்ளது. தந்தை மாத்திரமே வந்து, இந்த யாத்திரை செய்யக் கற்பிக்கின்றார். அவர்கள் பிறவிபிறவியாக நான்கு பிரதான யாத்திரை ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்கின்றார்கள். எல்லையற்ற தந்தை கூறுகின்றார்: என்னை நினைவுசெய்தால், நீங்கள் தூய்மையாகுவீர்கள்! ஒரு யாத்திரை செல்வதன் மூலம் நீங்கள் தூய்மையாகுவீர்கள் என வேறு எவரும் கூற மாட்டார்கள். மக்கள் யாத்திரை ஒன்றை மேற்கொள்ளும் பொழுது, தூய்மையைக் கடைப்பிடிக்கின்றார்கள். இக்காலத்தில் அங்கே அனைத்தும் அழுக்காகவே உள்ளது! அவர்கள் தூய்மையாக இருப்பதில்லை. எவருக்கும் இந்த ஆன்மீக யாத்திரையைப் பற்றித் தெரியாது. இந்த நினைவு மாத்திரமே உண்மையான யாத்திரை எனத் தந்தை இப்பொழுது உங்களுக்குக் கூறியுள்ளார். அம்மக்;கள் ஒரு யாத்திரையில் சென்ற பின்னர், வீடு திரும்பியதும், முன்னர் இருந்தது போன்றே ஆகுகின்றார்கள். அவர்கள் தொடர்ந்தும் சுற்றித் திரிகின்றார்கள். வாஸ்கொடகாமா உலகைச் சுற்றி வந்ததால், அவர்களும் சுற்றி வருகிறார்கள். ஒரு பாடல் உள்ளது: நாங்கள் எங்கெல்லாம் சென்றபொழுதிலும், உங்களிடமிருந்து தொலைவிலே இருந்தோம். பக்தி மார்க்கத்தில் உள்ள எவராலுமே உங்களை அவரை அடையுமாறு செய்ய முடியாது. எவருமே கடவுளைக் காணவில்லை; அவர்கள் கடவுளிடமிருந்து தொலைவிலேயே இருந்துள்ளார்கள். அவர்கள்

யாத்திரை செல்கின்றார்கள், பின்னர் வீடு திரும்பியதும், அவர்கள் ஐந்து விகாரங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். அந்த யாத்திரைகள் அனைத்தும் பொய்யானவை. இதுவே தந்தை வருகின்ற, அதிமேன்மையான சங்கமயுகம் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது புரிந்துகொள்கின்றீர்கள். தந்தை வந்து விட்டார் என்பதை அனைவரும் ஒருநாள் அறிந்து கொள்வார்கள். 'இறுதியில் கடவுளை நீங்கள் அடைகின்றீர்கள்' என்பதும் கூறப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு? இது எவருக்கும் தெரியாது. இனிமையிலும் இனிமையான குழந்தைகளாகிய நீங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதன் மூலம் மீண்டும் ஒருமுறை பாரதத்தைச் சுவர்க்கம் ஆக்குகின்றீர்கள் என்பதைப் புரிந்துகொள்கின்றீர்கள். நீங்கள் பாரதம் என்ற பெயரை மாத்திரமே குறிப்பிடுகின்றீர்கள். அந்த நேரத்தில் வேறு எந்தச் சமயமும் இருக்கவில்லை. முழு உலகமும் தூய்மையாகுகின்றது. இப்பொழுது எண்ணற்ற சமயங்கள் உள்ளன. தந்தை வந்து உங்களுக்கு முழு விருட்சத்தினதும் ஞானத்தைக் கொடுக்கின்றார். அவர் உங்களுக்கு இதனை ஞாபகப்படுத்துகின்றார். நீங்கள் தேவர்களாக இருந்தீர்கள், பின்னர் நீங்கள் சத்திரியர்களாகவும், பின்னர் வைசியராகவும், அதன்பின்னர் சூத்திரர்களாவும் ஆகினீர்கள். இப்பொழுது நீங்கள் பிராமணர்கள் ஆகியுள்ளீர்கள். 'ஹம்சோ' (நான் எதுவாக இருந்தேனோ, அதுவாக உள்ளேன்) என்பதற்கான மிகவும் இலகுவான விளக்கத்தைத் தந்தை இப்பொழுது உங்களுக்குக் கொடுத்துள்ளார். ஓம் என்றால் 'நான் ஓர் ஆத்மா' என்று அர்த்தம், ஆத்மாவாகிய நான் சக்கரத்தைச் சுற்றி வருகின்றேன். ஆத்மாவாகிய நானே பரமாத்மா என்றும், ஒவ்வோர் ஆத்மாவும் பரமாத்மாவே என்றும் அம்மக்கள் கூறுகின்றார்கள். 'ஹம்சோ' என்பதன் உண்மையான அர்த்தம் அவர்களில் ஒருவருக்கேனும் தெரியாது. தந்தை கூறுகின்றார்: சதா இந்த மந்திரத்தை மாத்திரமே நினைவுசெய்யுங்கள்! சக்கரம் உங்கள் புத்திகளில் இல்லாதிருந்தால் உங்களால் எவ்வாறு பூகோள ஆட்சியாளர்கள் ஆக முடியும்? ஆத்மாக்களாகிய நாங்கள் இப்பொழுது பிராமணர்கள் ஆகியுள்ளோம், பின்னர் தேவர்கள் ஆகுவோம்;. இதனை நீங்கள் எவரிடம் கேட்டாலும் அவர்களால் உங்களுக்குப் பதிலளிக்க முடியாது. அவர்கள் 84 பிறவிகளின் அர்த்தத்தைக் கூட அறியார்கள். 'பாரதத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்' நினைவுகூரப்பட்டுள்ளது. அது நல்லது! நீங்கள் சதோபிரதான், சதோ, இரஜோ, தமோ ஸ்திதிகள் மற்றும் சூரிய வம்சம், சந்திர வம்சம் வைசிய வம்சம் பற்றிய அனைத்தையும் இப்பொழுது புரிந்துகொள்கின்றீர்கள். விதையான தந்தை மாத்திரமே ஞானக்கடல் என அழைக்கப்படுகின்றார். அவர் இந்தச் சக்கரத்திற்குள் பிரவேசிப்பதில்லை. ஆத்மாக்களாகிய நாங்கள் பரமாத்மாக்கள் ஆகுகின்றோம் என்றில்லை; இல்லை! தந்தை எங்களை ஞானம் நிறைந்தவர்களாக இருப்பதில் எங்களைத் தனக்குச் சமமானவர் ஆக்குகின்றார். ஆனால் அவர் எங்களைத் தன்னைப் போன்று கடவுள் ஆக்குவதில்லை. இவ்விடயங்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும், அப்பொழுதே உங்கள் புத்தியில் உங்களால் சக்கரத்தைச் சுழற்ற முடியும். இதுவே சுயதரிசனச் சக்கரம் என்று அழைக்கப்படுகின்றது. உங்கள் புத்தியைப் பயன்படுத்துவதால், நீங்கள் எவ்வாறு 84 பிறவிச் சக்கரத்திற்குள் வருகிறீர்கள் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். அனைத்தும் இதில் உள்ளடக்கப்படுகின்றது. நேரம், குலங்கள், வம்சங்கள் போன்ற அனைத்துமே இதில் அடக்கப்பட்டுள்ளன. குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் இந்த ஞானம் முழுவதும் இருக்க வேண்டும். ஞானத்தினூடாகவே நீங்கள் உயர்ந்ததோர் அந்தஸ்தைப் பெறுகிறீர்கள். உங்களிடம் ஞானம் இருந்தால், உங்களால் அதனைப் பிறருக்கும்; கொடுக்க முடியும். இங்கே நீங்கள் பரீட்சைத்தாள் எதனையும் எழுதுமாறு கேட்கப்பட மாட்டீர்கள். ஏனைய

பாடசாலைகளில் அவர்களுக்கான பரீட்சைத்தாள்கள் வெளிநாட்டிலிருந்து வருகின்றன. வெளிநாடுகளில் கற்பவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிநாட்டிலேயே கொடுக்கப்படுகின்றன. அங்கேயும் பரீட்சைத்தாள்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குப் பிரதான கல்வி அமைச்சர் ஒருவரையும் அவர்கள் நியமிக்கின்றார்கள். உங்கள் பரீட்சைத்தாளைப் பரீட்சிப்பவர் யார்? அதனை நீங்களே செய்யலாம். நீங்கள் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவ்வாறு உங்களை நீங்கள் ஆக்கிக் கொள்ளலாம். முயற்சி செய்வதன் மூலம் நீங்கள் விரும்பிய அந்தஸ்தைத் தந்தையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். முயற்சி செய்வதன் மூலம் நீங்கள் விரும்பிய அந்தஸ்தைக் தந்தையிடமிருந்து பெறலாம். கண்காட்சிகளில், குழந்தைகளாகிய நீங்கள் அவர்களிடம் வினவுகிறீர்கள்: நீங்கள் என்னவாகுவீர்கள்? ஒரு தேவராகவா, ஒரு சட்டநிபுணராகவா அல்லது வேறு எதுவாகப் போகின்றீர்கள்? நீங்கள் எந்தளவிற்குத் தந்தையை நினைவுசெய்து சேவை செய்கின்றீர்களோ, அதற்கேற்ப அதன் பலனைப் பெறுவீர்கள். தந்தையை மிகவும் நன்றாக நினைவுசெய்பவர்கள் தாம் சேவை செய்ய வேண்டும் என்றும் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். பிரஜைகள் உருவாக்கப்பட வேண்டும். ஓர் இராச்சியம் உருவாக்கப்படுகின்றது என்பதால் அதற்கு எல்லா வகையினரும் தேவைப்படுகின்றார்கள். அங்கே ஆலோசகர்கள் எவரும் இருப்பதில்லை. விவேகம் குறைந்தவர்களுக்கே ஆலோசகர்கள் தேவை. அங்கே உங்களுக்கு எந்த ஆலோசனையும் தேவைப்பட மாட்டாது. சிலர் பாபாவிடம் ஆலோசனை பெறுவதற்காக வருகின்றார்கள். அவர்கள் உலகளாவிய விடயங்களையிட்டே ஆலோசனை பெறுகின்றார்கள். ‘எங்கள் பணத்தை நாங்கள் என்ன செய்வது?’ ‘எங்கள் வியாபாரத்தை நாங்கள் எவ்வாறு மேற்கொள்வது?’ பாபா கூறுகின்றார்: அத்தகைய உலகளாவிய விடயங்களையிட்டுத் தந்தையிடம் கேட்காதீர்கள். சிலவேளைகளில் அவர் சில குழந்தைகள் விரக்தியடையாதிருப்பதற்காகச் சிறிதளவு ஆதாரத்தை வழங்குகின்றார். அது எனது தொழில் அல்ல. எனது பணி இறைபணியாகும். அதாவது உங்களுக்குப் பாதையையும், எவ்வாறு நீங்கள் உலக அதிபதிகள் ஆகுவது என்பதைக் காட்டுவதுமே ஆகும். நீங்கள் ஸ்ரீமத்தைப் பெறுகிறீர்கள், ஆனால் ஏனைய அனைத்தும் அசுர கட்டளைகளாகும். சத்தியயுகத்தில் மேன்மையான வழிகாட்டல்களே உள்ளன. கலியுகத்தில் அசுர கட்டளைகளே உள்ளன. அது சந்தோஷ பூமியாகும். அங்கே நீங்கள் வினவ வேண்டிய தேவையில்லை: ‘நீங்கள் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருக்கிறீர்களா?’, ‘உங்கள் உடல் ஆரோக்கியம் நன்றாக உள்ளதா?’ அத்தகைய கேள்விகள் அங்கு இருப்பதில்லை. அத்தகைய கேள்விகள் இங்கேயே வினவப்படுகின்றன. உங்களுக்கு எந்தச் சிரமமும் இருப்பதில்லை, இல்லையா? நீங்கள் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருக்கிறீர்களா? இதில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீங்கள் இவ்வாறு வினவும் வகையில் அங்கே துன்பம் இருப்பதில்லை. இது துன்ப உலகம். உண்மையில் எவருமே உங்களை இந்தக் கேள்விகளைக் கேட்கத் தேவையில்லை. மாயை உங்களை வீழ்த்தினாலும் நீங்கள் தந்தையைக் கண்டு கொண்டீர்கள். நீங்கள் பதிலளிக்க வேண்டும்: எனது சுகநலன் குறித்த விடயங்களைப் பற்றி நீங்கள் என்னை ஏன் கேட்கிறீர்கள்? நாங்கள் இறைவனின் குழந்தைகள். எனவே எங்கள் சுகநலனைப் பற்றி நீங்கள் ஏன் எங்களைக் கேட்க வேண்டும்? பிரம்ம தத்துவத்தில் அப்பால் வசிக்கின்ற அந்த ஒருவரைக் கண்டடைய அக்கறை கொண்டிருந்தேன். இப்பொழுது நான் அவரைக் கண்டு கொண்டதால் வேறெதனைப் பற்றிக் அக்கறை கொள்வேன்? நீங்கள் யாருடைய குழந்தைகள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்! நீங்கள் தூய்மையாகியதும் யுத்தம் ஆரம்பிக்கும் என்ற ஞானம் உங்கள்

புத்தியில் உள்ளது. ஆகவே நீங்கள் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருக்கிறீர்களா என்று உங்களை அவர்கள் கேட்கும்பொழுது, அவர்களிடம் கூறுங்கள்: நாங்கள் என்றும் சந்தோஷமாகவும், திருப்தியாகவுமே இருக்கின்றோம். நீங்கள் சுகவீனமுற்றிருந்தாலும் நீங்கள் தந்தையின் நினைவில் இருக்கிறீர்கள். சத்திய யுகத்திலும் பார்க்க இங்கு நீங்கள் அதிகளவு சந்தோஷத்துடனும், திருப்தியாகவும் இருக்கிறீர்கள். உங்களை இவ்வளவு தகுதியானவராக ஆக்குபவரும் சுவர்க்க இராச்சியத்தை உங்களுக்குக் கொடுப்பவருமான தந்தையை நீங்கள் கண்டு கொண்டதால், உங்களுக்கு வேறு எந்த அக்கறையும் எதற்கு? கடவுளின் குழந்தைகள் கொண்டிருக்கக்கூடிய அக்கறை யாது? அங்கேயும் தேவர்களுக்கு எதுவித அக்கறையும் இருப்பதில்லை. எனவே தேவர்களிலும் பார்க்கக் கடவுள் மேலானவர் என்பதால் கடவுளின் குழந்தைகளுக்கு எவ்வாறு வேறு அக்கறைகள் இருக்க முடியும்? பாபாவே எங்களுக்குக் கற்பிக்கின்றார்! அவரே எங்களுடைய ஆசிரியரும், சற்குருவும் ஆவார். பாபா எங்கள் தலைகள் மீது கிரீடங்களைச் சூட்டுகின்றார். நாங்கள் கிரீடங்களை அணிந்தவர்கள் ஆகுகின்றோம். நீங்கள் உலகக் கிரீடத்தை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். தந்தை அதை உங்களுக்குச் சூடுவதில்லை. சத்தியயுகத்தில் தனது மகனின் தலையிலேயே தந்தை தனது கிரீடத்தைச் சூட்டுகின்றார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆங்கிலத்தில் அவர் ‘முடிக்குரிய இளவரசர்’ எனப்படுகின்றார். ஆனால் இங்கோ தந்தை மகனுக்குக் கிரீடத்தைச் சூடாது போனால் தான் கிரீடத்தைப் பெறுவதற்காக, தந்தை மரணிக்க வேண்டுமென மகன் பொறுமை இழக்கின்றார். ஓர் இளவரசனிலிருந்து அவர் சக்கரவர்த்தி ஆகுவதற்கே விரும்புகின்றார். இத்தகைய விடயங்கள் அங்கே இருப்பதில்லை. அங்குள்ள சம்பிரதாயத்திற்கு ஏற்ப, தந்தை தனது மகனுக்குக் கிரீடம் அணிவித்த பின்னர் தனக்குரிய நேரத்தில் ஒதுங்கிக் கொள்வார். அங்கு ஓய்வு ஸ்;திதி என்ற பேச்சில்லை. அவர் தனது குழந்தைகளுக்கு மாளிகைகள் கட்டி அவர்களுடைய ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றுகின்றார். சத்திய யுகத்தில் சந்தோஷம் மட்டுமே நிலவுகிறது என்பதை உங்களால்; புரிந்துகொள்ள முடியும். நீங்கள் அங்கே செல்லும்பொழுது, அனைத்துச் சந்தோஷத்தையும் நடைமுறையில் பெறுவீர்;கள். சுவர்க்கத்தில் என்ன இருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய சரீரங்களை நீக்கும்பொழுது, எங்கே செல்கிறீர்கள்? இப்பொழுது தந்தை உங்களுக்கு நடைமுறை ரீதியில் கற்பிக்கின்றார். நீங்கள் உண்மையாகவே சுவர்க்கத்திற்குச் செல்வீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்! அவர்கள் தாம் சுவர்க்கத்திற்குச் செல்வதாகக் கூறுகின்றார்கள், ஆனால் சுவர்க்கம் என்றால் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. பிறவிபிறவியாக நீங்கள் அறியாமைக்குரிய விடயங்களைச் செவிமடுக்கின்றீர்கள். தந்தை இப்பொழுது சத்தியத்தைக் கூறுகின்றார். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தந்தை தாயாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. சதா சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருப்பதற்கு, தந்தையின் நினைவில் நிலைத்திருங்கள். கற்பதனால் உங்கள் மீது இராச்சியக் கிரீடத்தை இடுங்கள்.

2. ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதன் மூலம் பாரதத்தைச் சுவர்க்கமாக்குகின்ற சேவையைச் செய்யுங்கள். ஸ்ரீமத்திற்கு எப்பொழுதும் மதிப்பளியுங்கள்.

**ஆசீர்வாதம்:** நீங்கள் பாப்தாதாவுடன் ஒரு தொடர்பையும், உறவுமுறையையும் கொண்டிருப்பதால், மனோ சக்தியின் நடைமுறை அத்தாட்சியைப் பார்த்து, சூட்சுமமான சேவையைச் செய்வீர்களாக.

உங்களால் மனோ சக்தியினதும், செயல்களின் சக்தியினதும் நடைமுறை அத்தாட்சியைப் பார்க்க முடிவதைப் போன்று, அதேவழியில், அதிசக்திவாய்ந்த மௌன சக்தியின் நடைமுறை அத்தாட்சியைப் பார்ப்பதற்கு, சதா பாப்தாதாவுடன் ஒரு தெளிவான தொடர்பும், உறவுமுறையும் இருக்கட்டும். இதுவே யோக சக்தி என அழைக்கப்படுகின்றது. அத்தகைய யோக சக்தியை உடைய ஆத்மாக்களால் தொலைவிலுள்ள ஆத்மாக்களுக்குத் தங்கள் முன்னால் நேரடியாகப் பௌதீகமாக இருக்கின்ற அனுபவத்தைக் கொடுக்க முடியும். அவர்களால் ஆத்மாக்களை வரவழைத்து அவர்களை மாற்ற முடியும். இது சூட்சும சேவை ஆகும், இதற்கு, மன ஒருமைப்பாட்டுச் சக்தியை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

**சுலோகம்:** தங்கள் பொக்கிஷங்கள் அனைத்தையும் ஒரு தகுதிவாய்ந்த வழியில் பயன்படுத்துபவர்கள் மாத்திரமே, மகா தானி ஆத்மாக்கள் ஆவார்கள்.

**---ஓம் சாந்தி---**